உ

# ஆலய வழிபாட்டின் அறிவியல் விளக்கம்


மருத்துவர் இ. லம்போதரன்
சைவ சித்தாந்த பீடம், கனடா
www.knowingourroots.com

## நாம் வாழும் அண்டத்தொகுதி

நாம் வாழும் இந்தப் பூமி சூரியனை மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றது. நமது சூரிய குடும்பத்தில் இவ்வாறு எட்டு கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இது எமது **சூரிய குடும்பம்** ஆகும். இவ்வாறு பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்று சொன்னவர் **கலிலியோ கலிலி (Galileo Galilei 1564 – 1642).** இதற்காக அன்றைய திருச்சபையினால் விசாரிக்கப்பட்டு போப்பாண்டவரினால் வீட்டுக்காவலில் அடைக்கப்பட்டார். இறப்பின் போதும் அவருக்கு உரிய புதைகுழி மறுக்கப்பட்டது.


ஆனால் கோள்கள் சூரியனைச் சுற்றி வருவதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சங்க இலக்கியமான **சிறுபாணாற்றுப்படை**யின் பாடல் வரி 242 பின்வருமாறு குறிப்பிடுகின்றது.


**வாள் நிற விசும்பில் கோள்மீன் சூழ்ந்த**
**இளங் கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து**




இது போல் ஆயிரக் கணக்கான சூரிய குடும்பங்களைக் கொண்டது **ஆகாயகங்கை என்னு பால்வீதி கலக்ஸி** அல்லது **அண்டத்தொகுதி**. இவற்றுள் 3200 கிரகத் தொகுதிகள் இன்றுவரை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆகாயகங்கை என்னும் பால்வீதி அண்டத்தையே **பூலோகம்** என்று எமது சமயம் கூறுகின்றது. இந்தச் சூரிய குடும்பங்கள் எல்லாம் 600 கிலோமீட்டர்/ செக்கன் எனும் வேகத்தில் இந்த பால்வீதியின் மையத்தைச் சுற்றி வருகின்றன. இந்த மைய அச்சை **மேரு** என்பர். எமது சூரிய குடும்பம் இவ்வாறு பால்வீதியில் ஒரு சுற்று சுற்றிவர எடுக்கும் காலம் **245 மில்லியன் வருடங்கள்** ஆகும்.





பால்வீதி அல்லது ஆகாயகங்கை கலக்ஸி என்னும் ஒரே ஒரு அண்டத்தொகுதியே உள்ளது என்றும் நாம் நேரடியாகவும் தொலைநோக்கிகள் ஊடாகவும் காணும் அனைத்து உலகங்களும் நட்சத்திரங்களும் இந்த ஒரே ஒரு அண்டத்தொகுதியின் கூறுகளே என்றும் சமீப காலம் வரை வானியல் விஞ்ஞானம் கருதி வந்தது. **எட்வின் ஹபிள் (Edwin Hubble 1889 – 1953)** என்னும் விஞ்ஞானி 1924 இல் இந்த பால் வீதி அண்டத்துக்கு அப்பாலும் பல அண்டங்கள் உள்ளன என்று கூறியபொழுது அதற்கு விஞ்ஞானிகள் மத்தியில் பலத்த எதிர்ப்பு எழுந்தது. ஆயினும் அவரின் கூற்று உண்மை என்று உணரப்பட்டபொழுது 1990 இல் அண்டவெளிக்கு அனுப்பிய சக்தி வாய்ந்த தொலைநோக்கிக்கு அவரின் பெயரால் **ஹபிள் தொலைநோக்கி ( Hubble Telescope)** என்று பெயர் இடப்பட்டது. இன்று எமது பால்வீதி அண்டத்தொகுதிக்கு அப்பாலும் இதுபோல் பல கோடி அண்டத்தொகுதிகள் உள்ளன என்று வானியல் விஞ்ஞானம் கூறுகின்றது. இதுவரை இவ்வாறு இரண்டு ட்ரில்லியன் அண்டத்தொகுதிகளுக்கு மேல் அவதானிக்கக்கூடியதாக உள்ளதாக வானியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனையே அன்று

**" அங்கண் மாஞாலத்துக்கோர் ஆயிரங் கோடி அண்டம்"**

என்று **கந்தபுராணம்** கூறுகின்றது. இதனையே

**"நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"**

என்று **திருவாசகம்** கூறுகின்றது. இந்த அண்டங்கள் யாவும் சுற்றிவருகின்ற மைய அச்சையே சைவம் **மஹாமேரு** என்று அழைக்கின்றது. ஒவ்வொரு அண்த்தினது மைய அச்சு **மேரு** ஆகும்.

இந்த அண்டங்களில் எமது பௌதிக விஞ்ஞான விதிகளுக்கு அப்பாற்பட்ட மூலகங்கள்/ தத்துவங்களினால் ஆன அண்டங்களும் உள்ளன. இவற்றின் இயற்கை விதிகளும் எமது இயற்கையின் விதிகளில் இருந்து வேறுபட்டவை. இந்த இயற்கையையும், அங்கு நடப்பவற்றையும் நமது இயற்கைப் பௌதிக விதிகளுக்கு உட்பட்ட நமது கருவிகளினாலும், கணிப்புகளினாலும், ஆராய்ச்சிகளினாலும் கண்டறியவோ, எதிர்வு கூறவோ முடியாது. இன்றைய விஞ்ஞானமும் இதை ஏற்றுக்கொண்டுள்ளது. 2018 இல் காலமான **ஸ்டீபன் ஹோக்கிங்ஸ்** என்னும் விஞ்ஞானி இதனையே **"அங்கு நான்கு கைகளுடன் கூடிய மனிதர்களும் இருக்கலாம்; அவர்கள் நைதரசனைச் சுவாசித்துகொண்டும், பாதரசத்தைப் பருகிக்கொண்டும் இருக்கலாம்"** என்று 1997 இல் **"இசுதீபன் ஹோக்கிங் உடைய அண்டம் (Stephen Hawking's Universe)"** என்னும் தொலைக்காட்சி ஆவணத் தொடர் ஒன்றில் கூறியிருந்தார்.




**மூவகை உலகங்கள்**

இந்த **வேறுபட்ட இயற்கைகளினாலான** அண்டத்தொகுதிகளை,

- சுத்தமாயா உலகங்கள் (Pure Cosmic Worlds)
- அசுத்த மாயா உலகங்கள் (Impure Cosmic Worlds)
- பிரகிருதி மாயா உலகங்கள் (Prakrithi Cosmic Worlds)

என்று **மூன்று பெரும் பிரிவுகள்** அல்லது மண்டலங்களாகச் சொல்லுகின்றது எமது சமயம்.

1. நாம் இருக்கும் எமது இயற்கையுடன் கூடிய அண்டத்தொகுதிகள் யாவும் **பிரகிருதி மாயா உலகங்கள்** ஆகும். எமது விஞ்ஞானம் ஆராய்வதும், வெளிப்படுத்துவதும், நாம் கற்பதும் இந்த அண்டங்களையும் அவற்றின் இயற்கையுமே.
2. இதற்கு அடுத்த மண்டலம் **அசுத்த மாயா உலகம்**. இதன் அண்டத்தொகுதிகள், அவற்றின் இருப்புகள், இயற்கை விதிகள் நமது பிரகிருதி அறிவு, ஆராய்ச்சி, கணிப்பு, எதிர்வு கூறல்களுக்கு அப்பாற்பட்டவை.
3. இதற்கும் அடுத்த மண்டலம் **சுத்தமாயா உலகம்**. இதன் இயற்கையும் முன்னைய பிரகிருதி மாயை மற்றும் அசுத்த மாயை உலக இயற்கைகளுக்கும் விதிகளுக்கும், அறிவு, ஆராய்ச்சிகளுக்கும் அப்பாற்பட்டது.


உண்மையில் இந்த மூன்று வகை அண்ட மண்டலங்களும் ஒன்றுக்கு ஒன்று அப்பால் இருப்பன அல்ல. இவை **ஒன்றை ஒன்று ஊடறுத்தும், ஊடுருவியும்**

உள்ளன; இயங்குகின்றன;பயணிக்கின்றன. ஆயினும் அவற்றின் வேறுபட்ட இயற்கையினால் அவை நமது அறிவுக்கும், புலனுக்கும், ஆராய்ச்சிக்கும் எட்டுவதில்லை.

நமது பிரகிருதி மாயா உலகிற்கு அதனை ஊடுருவி வியாபித்து அதற்கு அப்பாலும் பரந்திருக்கும் அசுத்தமாயா உலகம், சுத்த மாயா உலகங்களின் இருப்பும் இயக்கமும் தெரிவதில்லை.  அவற்றின் வேறுபட்ட இயற்கையினால் நமது அறிவுக்கும், புலனுக்கும், ஆராய்ச்சிக்கும் அவை எட்டுவதில்லை.

அசுத்த மாயா மண்டல அண்டங்களுக்கு நமது பிரகிருதி மாயா உலகங்களின் இருப்பும் இயற்கையும் புலனாகும்; ஆனால் அதனையும் நமது பிரகிருதி மாயா அண்டங்களையும் ஊடுருவி, வியாபித்து இவற்றுக்கு அப்பாலாயும் இருக்கும் சுத்த மாயா மண்டல இருப்புகள் புலனாகா.

சுத்தமாயா உலகமானது அதனிலும் கீழ்ப்பட்ட அசுத்தமாயா உலகம், பிரகிருதிமாயா உலகம் எனும் இரண்டு உலகங்களையும் ஊடுருவியும், வியாபித்தும், அவற்றுக்கு அப்பாலாயும் இருக்கும்; பயணிக்கும். இந்த சுத்த மாயா மண்டல அண்டங்களுக்கு அசுத்த மாயா மற்றும் பிரகிருதி மாயா மண்டல அண்டங்கள், அவற்றின் இயற்கைகள், இருப்புகள் யாவும் புலனாகும். ஆனால் அவற்றுக்கு சுத்த மாயா அண்டங்களின் இருப்பும் இயக்கமும் புலனாவதில்லை.



**பரலோகம் (இறையின் இருப்பும் இல்லமும்)**

இந்த மூன்று மண்டல அண்டங்களுக்கும் அவற்றின் இயற்கை இருப்புகளுக்கும் அப்பாற்பட்டதே இறை. இறை இந்த மூவகை உலகங்களையும் வியாபித்தும் ஊடுருவியும் அதே சமயம் இவற்றுக்கு அப்பாலுக்கு அப்பாலாயும் இருப்பது. மூவுலகங்களுக்கும் அப்பாலான அதன் இருப்பை **பரலோகம்** என்பர். அது இயற்கை மூலகங்களினாலோ விதிகளினாலோ ஆனது அல்ல. அது **இறையின் தூய சக்தியினால் ஆனது**. இதுவே **பரடைஸ்** என்று ஈரானிய, கிரேக்க அங்கில மொழிகளில் வந்தது.

பரலோகம் என்பது எங்கோ தூரத்தில் இருக்கும் ஒரு இடம் அல்ல; அது இங்கும், அங்கும், அதற்கப்பாலும், எங்கும் உள்ள இறையின் இருப்பு வியாபகம் ஆகும். இது மேற்கூறப்பட்ட மூவுலகங்களையும் ஊடுருவியும், வியாபித்தும், அவற்றுக்கு அப்பாலுக்கு அப்பாலாயும் இருக்கின்றது. ஆனால் அதன் இருப்பும், இயக்கமும் இந்த மூவுலகங்களின் அண்டங்களின் அறிவு ஆராய்ச்சிகளுக்குப் புலனாகா,

இந்த பரலோகமே இறையின் இருப்பிடம் ஆகும். இந்த இறையையே நாம் **பரசிவம்** என்றும், **பராசக்தி** என்றும், **பரப்பிரம்மம்** என்றும், **பரமாத்மா** என்றும், **பரம்பொருள்** என்றும், **பரலோகத்தில் இருக்கும் பிதா** என்றும், **பரஞ்சோதி** என்றும், **பரங்கருணை** என்றும், **பரமானந்தம்** என்றும் பலவாறாகக் கூறுகின்றோம்.

இந்த இறையை அடைவதையே **பரகதி** என்றும், **பர முத்தி** என்றும், **பரமபதம்** என்றும் சொல்லுகின்றோம். இந்த பரலோகத்தை இறைவனின் வீடு என்பர்; இதனைச் சென்றடைவதை **வீடுபேறு** என்பர்.

**இறையின் சொரூப நிலை (Real Form)**

நாம் எமது வீட்டில் இயல்பாக சுயமாக சுய உடையில் சாவதானமாக இருப்பதைப்போல் இறை தனது வீட்டில் தனது இயல்பு நிலையில் சுயமாக இயல்பாக இருப்பதை சைவம் **இறையின் சொருப நிலை** (Real Form)என்கின்றது. சொரூபம் என்றால் **சுய ரூபம்** என்று பொருள்.

எமது வீட்டில் இயல்பாக சாவதானமாக ஒரு லுங்கியுடனோ துண்டுடனோ இருக்கும் நாம் வேலைக்காக அலுவலகத்துக்கு அல்லது வேலைத்தலத்துக்குச் செல்லும்போது அதற்கான ஆடை அணிந்து அதற்குரிய கருவி கரணங்களுடன் கிளம்பி வேலைத்தலத்துக்குச் செல்கின்றோம்.

**இறையின் தடத்த நிலை (Official Form )**

பரலோகம் எனும் தனது வீட்டில் தனது இயல்பு நிலையில் சுயமாக சொரூப நிலையில் இருக்கும் இறையும் இவ்வாறே தனது வேலைக்காக தனது ஆடை, அணி, அலங்காரங்களுடன் அலுவலகமாகிய சுத்த மாயா உலகிற்கு வருகின்றார். இது இறையின் **தடத்த நிலை** (Official Form) என்கின்றோம்.

அவருடைய வேலை **படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்** என்னும் **ஐந்தொழில்கள்**. இவற்றை இவரை விட வேறு யாராலும் செய்யமுடியாது. ஆனாலும் இவர் அதிகாரம் கொடுத்து மற்றவரைகொண்டு செய்விக்கலாம். **இறை ஐந்தொழில்கள் ஆற்றிச் செயற்படும் அலுவலகமே சுத்தமாயா உலகம். சுத்தமாயா உலகம் இறையின் தலைமைச் செயலகம் ஆகும்.**

இறையின் தலமைச் செயலகமாகிய சுத்த மாயா உலகத்திலே அவர் தொழிலாற்றும் **ஐந்து திணைக்களங்கள்** (Departments) உள. ஐந்து திணைக்களங்களுக்கும் அவரே இயக்குனர். அங்கெல்லாம் அவரின் கீழ் பணி செய்யும் பலர் உளர்.

**சுத்தவித்தை**யில் பரசிவம் பிரமனாக நின்று படைத்தலையும், விஷ்ணுவாக நின்று காத்தலையும், உருத்திரனாக நின்று அழித்தலையும் செய்கின்றது. **சாதாக்கிய** தத்துவத்தில் சதாசிவனாக நின்று அருளலையும், **மாகேசுர** தத்துவத்தில் மகேசுவரனாக நின்று மறைத்தலையும் செய்கின்றது. **பிந்து** எனபது சக்தி தொழிற்படும் தளமாகும். **நாதம்** என்பது சிவன் தொழிற்படும் தளமாகும்.

இவ்வாறு சம்புவாகிய பரசிவத்தின் வெவ்வேறு வடிவங்களே ஐந்தொழில்களையும் செய்கின்றன. ஆதலால் இவ்வடிவங்களை **சம்புபட்சம்** என்பர்.

இவர்கள் ஸ்ரீகண்டருத்திரரால் அதிகாரம் கொடுத்து அதிட்டிக்கப்பெறும் பிரகிருதிமாயையில் செயற்படும் அணுபட்ச பிரம்ம, விஷ்ணு, உருத்திரர்களைப் போன்ற **அணுபட்ச** ஆன்மாக்கள் அல்லர். இவர்கள் முழுமுதற் கடவுளான பரசிவத்தின் வடிவங்கள். பரசிவத்தின் இந்த உருவங்கள் இந்த உலகங்களின் ஏனைய இருப்புகளைப் போல் மாயை என்னும் மூலப்பொருளினால் உருவானவை அல்ல; அவை யாவும் இறையின் தூய சக்தியினால் ஆனவை.

**உமையலாது உருவமில்லை – அப்பர் தேவாரம்**

பரசிவமானது இவ்வாறு பராசக்தியினால் எடுக்கும் இவ்வடிவங்களை **நவந்தருபேதம்** எனக் கூறுவர்.

சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், திகழும் ஈசன்,
உவந்தருள் உருத்திரன்தான், மால்,அயன் ஒன்றின் ஒன்றாய்ப்
பவந்தரும் அருவ நாலு, இங்கு உருவ நாலு, உபயம் ஒன்றாய்
**நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்.**

- **சிவஞானசித்தியார் 164.**

## கும்பாபிஷேக யாக சாலை விளக்கம்

இப்போது கும்பாபிஷேகத்தின் யாகசாலைக்கு வருவோம். பரலோகம் இறையின் வீடு என்று சொன்னோம். சுத்த மாயா மண்டல அண்டங்கள் இறை

தொழிலாற்றும் அலுவலகம் என்று சொன்னோம். **கும்பாபிஷேகத்தில் அமைக்கப்படும் யாகசாலை இறை செயற்படும் அலுவலகமான சுத்தமாயா உலகத்தின் ஒரு பிரதி வடிவமைப்பு ஆகும்.**

இறையும் இறையுடன் சேர்ந்து சுத்தமாயை உலகில் தொழிலாற்றும் ஏனைய தெய்வங்களும் இங்கு எமது பூமிக்கு வந்து செயலாற்றும் ஒரு தற்காலிக நடமாடும் அலுவலகமே யாகசாலை ஆகும். **இங்கு கடமையாற்றும் அடிப்படைத் தகுதி சுத்த மாயா உலகில் வதியும் தெய்வத்தன்மை பெற்ற ஒரு மலத்தாராகிய விஞ்ஞானகல ஆன்மாக்களுக்கு மட்டுமே உண்டு. அவர்களுக்கு மட்டுமே இங்கு இடம் உண்டு.**



கீழான அசுத்த  மாயையில் இருந்து செயற்படும் ஸ்ரீகண்ட ருத்திரர் போன்றோருக்கும், அதன் கீழ் பிரகிருதி மாயையில் நின்று தொழிற்படும் அணுப் பிரம்மா, அணு விஷ்ணு, அவரின் தசாவதாரங்கள், அணு உருத்திரன் ஆகியோருக்கும், அங்குள்ள ரிஷிகள், முனிவர்களுக்கும் சுத்த மாயா உலகின் பிரதிவடிவான **யாகசாலையில் எங்கும் இடம் இல்லை**.


**ஆலயத்தின் அடிப்படை விளக்கம்:**

இந்த யாகசாலையிலே ஓம குண்டங்களிலும், கும்பங்களிலும், மந்திரங்களிலும் அந்தந்த திக்குகளில் அந்தந்த இடங்களில் அந்தந்த

தெய்வங்கள் அழைக்கப்பட்டு, வரவேற்கப்பட்டு, அமர்த்தப்பட்டு, விண்ணப்பம் செய்யப்படுகின்றது.

பிரதான ஓம குண்டத்திலும், சிவாசனத்தின் மீது தாபிக்கப்பட்ட பிரதான கும்பத்திலும் பரம்பொருளாகிய இறை அழைக்கப்பட்டு, வரவேற்கப்பட்டு, அமர்த்தப்பட்டு வழிபடப்படுகின்றது.

**சிவாசனம்** என்பது முப்பத்தாறு தத்துவங்களால் ஆன மூவுலகங்களையும், அவ்வவற்றின் இருப்புகளையும், அங்கங்கு வதியும் தெய்வங்களையும் கொண்டதாகும்.




இந்த சிவாசனத்தில் எழுந்தருளி அதன் மேல் வீற்றிருக்கும் சிவமானது சிவாசனத்தின் கூறுகளான முப்பத்தாறு தத்துவங்களுக்கும், அவற்றாலான மூவுலகங்களுக்கும், அவற்றிலுள்ள அனைத்து இருப்புகளுக்கும், அங்கு இருக்கின்ற, இருந்த, இனிமேல் வரப்போகின்ற தெய்வங்களுக்கும், சமயங்களுக்கும் எல்லாம் அதீதமான, மேலான, அப்பாற்பட்ட தத்துவ அதீனனான இறையாகும். தத்துவங்களுக்க்கு அப்பாற்பட்ட தத்துவ அதீனனான இந்த இறையை **தத்துவாதீதாயை நமஹா**, **தத்துவாசனாயை நமஹா** என்றெல்லாம் நாமாவளிகள் போற்றுகின்றன.

ஆலய கும்பாபிஷேகத்துக்கு அமைக்கப்படும் யாகசாலை ஒருபோதும் தொடர்ந்து பேணப்படுவதில்லை. அது தற்காலிக அலுவலகம் ஆதலால் அதற்கேற்ப தற்காலிக பொருட்களினாலேயே ஆனால் மிக அழகுற நேர்த்தியாக அமைக்கப்பட்டாலும் கும்பாபிஷேகம் முடிந்தும் பிரித்துக் கலைக்கப்பட்டு விடும்.

இந்த தற்காலிக நடமாடும் அலுவலகம் கலைந்த பின்னரும் சுத்த மாயா உலகின் ஒரு கிளை அலுவலகமாக அவ்விடத்தில் தொடர்ந்து செயற்படும்படி பிரார்த்தித்து விண்ணப்பம் செய்யப்படுகின்றது. அந்த கிளை அலுவலகமே ஆலயம் ஆகும்.

**ஆலய பூசைகள், விழாக்கள்:**

இங்கு இறையினதும் அவரின் கீழ் பணியாற்றும் தெய்வங்களினதும் அவ்வப்போதான வரவையும், சான்னித்தியத்தையும், இருப்பையும் உறுதிப்படுத்தி அவர்களின் தொடர்ந்தேர்ச்சியான அலுவலகச் செயற்பாட்டுக்கு  உறுதி செய்வதே கும்பாபிஷேகத்தின் பின்னான மண்டலாபிஷேகமும், தொடர்ந்து வரும் நமது ஆலயங்களின் நித்திய, நைமித்திய பூசைகளுமாம்.

அலுவலகங்களிலே இடையிடையே நாம் மேலதிகாரியிடமுள்ள அவருடைய எமது அன்பையும் மரியாதையையும் நன்றி உணர்வையும் வெளிப்படுத்த நாம் அவருக்குச் செய்யும் பரிசுகளும், வாழ்த்துகளும், பிறந்தநாள் போன்ற கொண்டாட்டங்களும் போன்றதே ஆலயத்தில் நாம் செய்யும் நித்திய நைமித்திய பூசைகளும், திருக்கலியாணம் போன்ற விழாக்களும் ஆகும்.

இடையிடையே அலுவலகத்தில் இருந்து வெளியே புறப்பட்டுச் செய்யும் களவிஜயமே திருவிழாவும் அக்காலத்தில் நடைபெறும் வீதியுலா என்னும் திருவுலாவும் ஆகும்.

**இல்லத்து பூசை:**

திராவிடக் கட்டடக் கலை மரபுப்படி அமைக்கப்படும் எமது பாரம்பரிய வீடுகளில் பெரிய அறை என்னும் அறை சுவாமி அறை எனப்படுகின்றது. இது பரலோகம் என்னும் இறையின் இல்லத்தைக் குறிப்பதாகும். இல்லத்தலைவனும் இல்லத்தலைவியும் அங்கு சிவத்தினதும் சக்தியினதும் பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள். அதுவே அவர்கள் இயல்பாக ஓய்வெடுக்கும் படுக்கையறையும், கூடியிருக்கும் தாம்பத்திய அறையும் ஆகும். புது மணத்தம்பதிகள் பார்வதி பரமேசுவரர்களின் பிரதிநிதிகளாகத் தாம்பத்தியம் தொடங்குவதும் இங்குதான்.

இதிலேயே ஒரு பகுதியில் சுவாமி கும்பிடும் இடம் இருக்கும். அக் காலத்தில் அங்குதான் தீபம் ஒரு அகல் விளக்காகவோ குத்துவிளக்காகவோ இருக்கும். இப்போதைய வீடுகளில் சுவாமிப்படங்கள் இருக்கும் சுவாமித் தட்டு இங்குதான் இருக்கும். வழிபடும்போது இவ்விடத்தைச் சுத்தப்படுத்தி விளக்கேற்றி அதை அப்பகுதியை இறை வந்து இருந்து எமது விண்ணப்பங்களை ஏற்கும் அலுவலகமான சுத்தமாயா உலகாகப் பாவித்து அங்கு பூசை செய்வது மரபு. கும்பிட்டு முடிந்ததும் சுவாமியை வழியனுப்பி வைத்து விளக்கை அணைப்பது மரபு.

**பூசைகள், விழாக்கள், விரதங்கள் இறைவனைப் பிரீதிப்படுத்தவா?**

இவ்வாறு ஆலயங்களிலும், இல்லங்களிலும் நாம் செய்யும் பூசைகள், வழிபாடுகள், படையல்கள், விழாக்கள், விரதங்கள் இறைவனை திருப்திப்படுத்தவா? ஆண்டவனை மகிழ்விக்கவா? கடவுளைக் குளிர்விக்கவா? அப்படித்தான் நாம் எல்லோரும் மேலோட்டமாக நினைத்துக்கொண்டிருக்கின்றோம் ஆனால் உண்மை அதுவல்ல.

கடவுள் நமது காணிக்கைக்காகவும், உணவுக்காகவும் காத்திருக்கும் பிச்சைக்காரன் அல்ல. இவையெல்லாம் நாம் கடவுளுக்கு என்று ஆலயங்களிலும் பூசைகளிலும் செய்வது அங்கு நமது விருப்பங்கள், கவலைகள், ஆற்றாமைகள், நன்றிகள், வேண்டுதல்களை விண்ணப்பித்து வழிபட்டு  இந்த உலகுக்குரிய இக நன்மைகளையும், நாம் இறந்த பின்னர் அந்த உலகின் பர இன்பங்களையும் பெற்று உய்வதற்காகவே.

இவை இறையைத் திருப்திப்படுத்துவதற்கோ அல்லது பிரீதிப்படுத்துவதற்கோ அல்ல. கடவுளை "**வேண்டுதல் வேண்டாமை இலான்"** என்று திருக்குறள் கூறுகின்றது.

**நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே**
**ஆளாய வன்புசெய்வோ மடநெஞ்சே யரனாமம்**
**கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்**
**கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.**

**காயமே கோயி லாகக் கடிமன மடிமை யாக**
**வாய்மையே தூய்மை யாக மனமணி யிலிங்க மாக**
**நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டிப்**
**பூசனை யீச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே .**

திருச்சிற்றம்பலம்

*Dr. Lambotharan, the founder of Saiva Siddhanta Peedam and its wing Knowing Our Roots, is committed to sharing the wisdom of Saiva Siddhanta, the choicest theology of Tamils. He is doing this by conducting Sunday classes for kids and youth, weekly Satsang meetings, radio talk shows, regular pilgrimages and field visits to his motherland. He has written many articles in Tamil and English on this subject. He is carrying this out as directed by his Jnana Guru Chidamparam A. Krishnamurti (Deeksha name - Kunchithapaatha naathan) of Sivakkudil tradition in 2005. He was furnished further by Saiva scholar S. Shanmugavel of Thiruvaavaduthurai Adheenam. It is worth to mention that he is also the grandson of Saiva Siddhnata Viddhagar V. Nagalingam JPUM of Vaddukoddai who presided the Saiva Siddhanta Maha Samajam conference in 1953 in Chennai. Dr. Lambotharan is also the Founder and former President of the International Medical Health Organization – Canada (IMHO- Canada) www.imhocanada.org , a worldwide charity mostly working among the Tamils in Sri Lanka, and Co-founder of the Toronto Tamil Sangam www.torontotamilsangam.ca . He is also one of the founders and board of directors of the Tamil Community Centre project www.tamilcentre.ca in Toronto. He can be reached on weekly zoom meetings every Saturday 7.30 pm EST Toronto time on the following link. Meeting ID: 984 429 0374; Passcode: satsang.*

www.knowingourroots.com